**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE**

**C.C No.191/2019**

**Deposition of Witness PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுகுமார் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2026

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிஇ இன்ஜினியரிங் படித்துள்ளேன். கடந்த 2012 ஆம் வருடம் நான் வேலை தேடிக் கொண்டிருந்த பொழுது எனது உறவினர் மூலம் பெருந்துறை ரோட்டில் உள்ள ஹனிவல் அப்பார்ட்மெண்டில் வசித்து வரும் சூர்யா என்கிற ரமேஷ் சந்தர் என்பவர் வெளிநாடுகளில் வேலை வாங்கி தருவதாக கேள்விபட்டு எனது பெற்றோருடன் 2012 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஈரோடு சென்று சூர்யாவை பார்த்தேன். சூர்யா எனது படிப்பு சம்பந்தமான விபரங்களை குறித்து தெரிந்து கொண்டு எனக்கு சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறினார்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.20 18:59:10 +0530

மேலும் சூரியா அவருக்கு சிங்கப்பூர் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் தெரியும் என்றும், பல பேர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கி கொடுத்துள்ளதாகவும் என்னிடம் கூறினார். அப்போது சூர்யாவுடன் இருந்த சூர்யாவின் தாயார் தான் நேதாஜி ரோடு, ஈரோட்டில் மாருதி காம்ப்ளக்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வருவதாக ஒரு விசிட்டிங் கார்டை எங்களிடம் காண்பித்து எனது மகன் கண்டிப்பாக வேலை வாங்கி கொடுத்து விடுவார் என எங்களிடம் கூறி எங்களை நம்ப வைத்தார்.

நாங்களும் அதற்கு சம்மதித்து 15.10.2012 ஆம் தேதி சூர்யாவிடம் வேலை பெறுவதற்கான விசா பெறுவதற்கும், விமான டிக்கெட்டிற்கும் ரூ,1,00,000/- அவர் வீட்டில் வைத்து சூர்யாவிடம் எனது கல்வி சான்றுகளுடன் கொடுத்தேன். பணம் கொடுக்கும் பொழுது சூர்யாவின் தாயார் அமிர்தவல்லியும் உடன் இருந்தார். அவர் பணத்தை பெற்று எண்ணி பார்த்து வைத்துக்கொண்டார். மீண்டும் 29.10.2012ல் ரூ,1,00,000/- அவர்களது வீட்டில் வைத்து கொடுத்தேன். மொத்தம் ரூ.2,00,000/- அதற்கு அவர்கள் எந்த ரசீதும் எனக்கு கொடுக்கவில்லை.

சூர்யாவும் அவரது தாயாரும் 17.11.2012ம் தேதி என்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக சொன்னார்கள். வேலை விவரம் கேட்டு 05.11.2012ம் தேதி காலை நான் போன் மூலம் தொடர்பு கொண்டு சூர்யாவுடன் பேச முயற்சித்த போது அவரது செல்போன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது. நான் பலமுறை தொடர்பு கொண்டேன், அவரது செல்ஃபோன் அணைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.05.20 18:59:18 +0530

அதனால் சந்தேகம் கொண்டு ஈரோடு பெருந்துறை ரோட்டிற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது, அவரது வீடு பூட்டி இருந்தது அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததில் அவர்களது வீடு சுமார் ஒரு வார காலமாகவே பூட்டிய நிலையில் தான் உள்ளது என்று தெரிந்து கொண்டேன். பின்னிட்டு என்னை போலவே  பல நபர்களிடம் என்னிடம் கூறியது போலவே வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பண மோசடி செய்துள்ளதாகவும், அவர்களிடமும் பாஸ்போர்ட் கல்வி சான்றுகள் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றிவிட்டு தலைமறைவாகிவிட்டதாக தெரிந்து கொண்டேன். பின்னிட்டு இவ்வழக்கு சம்பந்தமாக பாலமுருகன் கொடுத்த புகாரின் அடிப்படையில் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.20 18:59:25 +0530